எம்.சி.ஓபி.எண் : 994/2019 தேதி: 24/11/2025

மசா : 1

பெயர் : தாகேஷ் என்பவருக்கு அவரின் அம்மா ஷாசி வியாஷ்

த/பெயர் : சஞ்ஜெய் வியாஷ்

வயது : 39

**மனுதாரரின் தரப்பில் சாட்சி 1ன் முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் இந்த மனுவில் மனுதாரரின் தயார் கார்டியன். எனது தரப்பில் ஏற்கனவே பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு சான்று ஆவணங்கள் மசா ஆ1 முதல் மசா ஆ10 வரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

மேற்படி விபத்தானது தேசிய நெடுஞ்சாலையில் நடந்தது என்றால் சரிதான். நான் டெம்போ டிரவல்ஸ் வெனில் பயணம் செய்த நபர் என்றால் சரிதான். மேற்படி டெம்போ டிரவல்ஸ் வெனில் என்னுடன் சேர்ந்து 12 நபர்கள் பயணம் செய்தோம். டிரைவரை சேர்க்காமல் 12 நபர்கள் கணக்கிடப்பட்டது. மேற்படி விபத்தில் அரசு பேருந்தும் ஈடுபட்டிருந்தது என்றால் சரிதான். அரசு பேருந்தை இந்த வழக்கில் எதிர்மனுதாரராக சேர்க்கவில்லை. மேற்படி விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு எனது மகன் உள்நோயாளியாக 2 நாள்களாக இருந்தார். எனது மகனுக்கு எலும்பு முறிவு இல்லை என்றால் தலையில் எலும்பு முறிவு இருந்தது. தொடர் சிகிச்சை ஆவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவரது காயத்தின் தன்மை தற்பொழுது குணமாகி நன்றாக தான் உள்ளது என்றால் சரிதான். டெம்போ வென் சரியாக தான் சென்றுக் கொண்டிருந்தது என்றாலும் அரசு பேருந்தின் மீது தான் தவறு இருந்தது என்றாலும் நான் அதிகபடியான நஷ்ட ஈடு பெறுவதற்காக டெம்போ டிரவல்ஸ் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.